வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1189 /ஆ1 /2022, நாள் : 20.04.2022

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி – பேரா. முனைவர். கே.நித்தியானந்தம் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ சில தகவல்கள் கோரியது – சார்பு.

பார்வை :
1. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் (ம) துணை இயக்குநர் (மின் ஆளுமை) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.68606. எப். /RII/2022, நாள். 20.04.2022.
2. பொது நூலக இயக்ககம், உதவி இயக்குநர் மற்றும் தகவல் வழங்கும் அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1604/உ3/2022, நாள்.11.03.2022.

#######

பார்வையில் காணும் கடிதங்களின்படி பேரா. முனைவர். கே.நித்தியானந்தம் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ல் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளி நூலகங்களில் எத்தனை நூலகர்கள் பணியில் உள்ளனர், அரசுப் பள்ளிகளில் நூலகர்கள் காலிப்பணியிடங்கள் எத்தனை, எத்தனை அரசுப் பள்ளிகளில் நூலகம் செயல்படுகிறது மற்றும் நூலகங்கள் இல்லாத அரசுப் பள்ளிகள் எத்தனை என்பதற்கான விவரங்களை கோரியுள்ளார்.

எனவே மனுதாரர் கோரியுள்ள விவரங்களை கீழ் குறிப்பிட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து இரு தினங்களுக்குள் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. எனவே, வேலூர் கல்வி மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளி நூலகங்களில் எத்தனை நூலகர்கள் பணியில் உள்ளனர், அரசுப் பள்ளிகளில் நூலகர்கள் காலிப்பணியிடங்கள் எத்தனை, எத்தனை அரசுப் பள்ளிகளில் நூலகம் செயல்படுகிறது மற்றும் நூலகங்கள் இல்லாத அரசுப் பள்ளிகள் எத்தனை என்பதற்கான விவரங்களை இணைப்பில் காணும் உரிய படிவத்தின்படி மட்டுமே பூர்த்தி செய்து 21.04.2022 மாலைக்குள் அனுப்பி வைக்குமாறு அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– படிவம்

ஒ/- முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

அனைத்து வகை உயர்/மேல் நிலைப் பள்ளித் –
தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்– மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் (தகவலுக்காக)

//ப.த.//

(PTO)